# நகர்ப்புற உள்ளாட்சிகளில் மக்கள் சபைகள்

## பகுதி சபை மற்றும் வார்டு குழு

## ஓர் எளிய அறிமுகம்

# நகர்ப்புற உள்ளாட்சிகளில் மக்கள் சபைகள்
## பகுதி சபை மற்றும் வார்டு குழு
### ஓர் எளிய அறிமுகம்


| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | **நவம்பர் 2022** |
| பக்கங்கள் | : | **16** |
| தொகுப்பு & வெளியீடு | : | **தன்னாட்சி & மக்களின் குரல்** (Voice of People) |
| முகவரி | : | **தன்னாட்சி,**<br>**69, அங்கப்பன் நாயக்கன் தெரு,**<br>**சென்னை – 600 001.** |
| தொடர்புக்கு | : | **94457 00758 / 94448 26655** |
| மின்னஞ்சல் | : | **thannatchi@gmail.com / concernedcitizenscall@gmail.com** |
| இணையதளம் | : | **thannatchi.in** |
| முகநூல் | : | **fb.com/thannatchi & fb.com/ConcernedCitizensCall** |
| கீச்சகம் (Twitter) | : | **@thannatchi & @vopTamilNadu** |
| வலையொளி (YouTube) | : | **Thannatchi Ulaatchi Ungalaatchi** |
| புத்தகம் வடிவமைப்பு | : | **கோ.தேவநாதன்** |
| அட்டை வடிவமைப்பு | : | **மா.தமிழ்வாணன்** |
| அச்சகம் | : | **ஜோதி எண்டர்பிரைசஸ், சென்னை – 600005.** |
| நன்கொடை | : | ₹ **30/-** |
| நன்றி | : | **தாம்பரம் மக்கள் குழு, 9940220091** |


---

**தன்னாட்சியின் பிற வெளியீடுகள்**

**கிராமசபை –** அடிப்படை கேள்விகளும் பதில்களும்
**ஊராட்சி நிர்வாகம் –** அடிப்படை கேள்விகளும் பதில்களும்
**100 நாள் வேலை** (MGNREGA) **–** அடிப்படை கேள்விகளும் பதில்களும்

## உள்ளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 5 |
| 2. | பகுதி சபை | 7 |
| 3. | வார்டு குழு | 9 |
| 4. | பகுதி சபை மற்றும் வார்டு குழு விதிமுறைகளில் உள்ள குறைபாடுகள் | 12 |
| 5. | வரைபட விளக்கம் | 15 |


ஆதாரம் :

- THE TAMIL NADU URBAN LOCAL BODIES (WARD COMMITTEE AND AREA SABHA) RULES, 2022 [G.O. Ms. No. 92, Municipal Administration and Water Supply (Election), 24th June 2022]

- தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் திருத்தச்சட்டம் 2010 (Act. No 35 of 2010 - Tamil Nadu Municipal Laws (Amendment) Act, 2010)

## தன்னாட்சி

‘ **உள்ளாட்சியில் நல்லாட்சி உள்ளூரில் வளங்குன்றா வளர்ச்சி** ’ என்ற முழக்கத்தோடு செயல்பட்டு வரும் தன்னாட்சி, உள்ளாட்சியைக் குறிப்பாகக் கிராம ஊராட்சியை, ‘ எளிய மக்கள் தங்களுக்காகத் தாங்களே நிர்வாகம் செய்யும் அரசாக’ மாற்ற முயலும் ஒரு மக்கள் இயக்கமாகும். ‘ உள்ளாட்சி உங்களாட்சி’ என்ற பெயரில், 2017 ஆம் ஆண்டு முதல் உள்ளாட்சிகளுக்காக, கிராமசபைக்காக, கிராம தன்னாட்சிக்காகத் தொடர்ந்து செயல்பட்டு வரும் சமூகச் செயற்பாட்டாளர்களால், 2018 ஆம் ஆண்டு ‘தன்னாட்சி’ என்ற பெயரில் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம்–1975 இன் கீழ் சங்கமாகப் பதிவு செய்யப்பட்டு இயங்கி வரும் இயக்கமே தன்னாட்சி.

விளிம்பிலும் விளிம்பு நிலையிலுள்ள கடைக் கோடி குடிமக்களும் பொது நிர்வாகம் செய்வதற்கான அதிகாரத்தையும் தகவல்களையும் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற அதிகாரப் பரவலைக் கொள்கையாகக் கொண்டு குரலற்றவர்களின் குரலாகத் தொடர்ந்து ஒலித்து வருகிறது நம் தன்னாட்சி !

**மத்தியில் கூட்டாட்சி !**
**மாநிலத்தில் சுயாட்சி !**
**‘உள்ளாட்சியில் தன்னாட்சி’ !**

**என்பது வெற்று முழக்கமல்ல...**
**நாம் வென்றெடுக்க வேண்டிய லட்சியம் !**

## மக்களின் குரல் (Voice Of People)

சமூக அக்கறை கொண்ட மகளிர் பலர் ஒன்று சேர்ந்து, சென்னையில் 2017 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் முன்னெடுத்த அரசியல் கட்சி சார்பற்ற, குடிமக்களின் ஒரு தன்னார்வக் கூட்டமைப்பே மக்களின் குரல் (Voice of People).

நகர்ப்புற உள்ளாட்சிகளில் மக்களின் நேரடி பங்கேற்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையை உறுதி செய்யும் மக்கள் தளங்கள் தான் பகுதி சபை மற்றும் வார்டு குழு. அவற்றின் உண்மையான நோக்கங்கள் நீர்த்துப் போய்விடாமல் தமிழகத்தில் நடைமுறைப்படுத்த தொடர் முயற்சிகளை 2018–லிருந்து மேற்கொண்டு வருகிறது மக்களின் குரல்.

மேலும், பங்கேற்பு ஜனநாயகத்தை தமிழகத்தில் பரவலாக வலுப்படுத்தும் நோக்கம் கொண்ட தோழமை மக்கள் இயக்கங்களோடு இணைந்து, இத்தளங்களை வலுப்படுத்துவற்கான பரப்புரையை, அரசியல் கட்சிகள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களிடையே கொண்டு செல்லும் பணிகளிலும் தொடர்ந்து இயங்கி வருகிறது மக்களின் குரல்.

## அறிமுகம்

நகர்ப்புற உள்ளாட்சிகளில் வாழும் மக்களுக்கும்,அடித்தட்டு ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ள அனைவருக்கும் வணக்கம்! கிராமசபை பற்றி நாம் கேள்விப்பட்டிருப்போம் ஒரு கிராம ஊராட்சியில் உள்ள அனைத்து வாக்காளர்களும் ஊராட்சியின் நிர்வாகத்திலும் வளர்ச்சிக்கானத் திட்டமிடுதலிலும் பங்கேற்க வழி செய்யும் மக்கள் சபைதான் கிராமசபை. ஆளுங்கட்சி உட்பட, பல கட்சிகளுக்குக் கடந்த சட்டமன்றத் தேர்தலில், கிராமசபை ஒரு முக்கியமான பிரச்சார யுக்தியாக இருந்தது. தற்போதைய முதல்வர் அவர்கள், பல ஊர்களுக்குப் பயணப்பட்டு, 'மக்கள் கிராமசபை' என்ற பெயரில் மக்கள் சந்திப்புக் கூட்டங்களை நடத்தினார். அந்த அளவிற்கு கிராமசபைகள் தமிழ்நாட்டில் கவனம் பெறத் தொடங்கியுள்ளன. கிராமசபை போல நகர்ப்புற உள்ளாட்சிகளிலும் மக்கள் பங்கேற்பு சபைகள் உள்ளன.

இந்தியாவில் 1992ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட73வது சட்டத்திருத்தம் மூலம் அரசமைப்புச் சட்டத்தில் ஏப்ரல் 24, 1993ஆம் ஆண்டு பகுதி IXA சேர்க்கப்பட்டதன் விளைவாக, ஊரக உள்ளாட்சிகள் அரசியல் சாசன அங்கீகாரம் பெற்றன. அதைத் தொடர்ந்து, நம் சட்டமன்றத்தில் 'தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994' நிறைவேற்றப்பட்டது. எளிய மக்களும் பங்கேற்று முடிவுகளை எடுக்கக்கூடிய கிராமசபை எனும் மக்கள்சபையும் நடைமுறைக்கு வந்தது. அதே 1993ஆம் ஆண்டு, 74வது சட்டத்திருத்தம் மூலம் பகுதி IXA அரசமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்டதன் விளைவாக, நகர்ப்புற உள்ளாட்சிகளும் அரசியல் சாசன அங்கீகாரம் பெற்றன. ஆனால் தமிழ்நாட்டில் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கெனப் பொதுவான சட்டம் இதுவரை நடைமுறைக்கு வரவில்லை. கிராமசபைகளைப் போல நகர்ப்புறங்களில் இயங்க வேண்டிய மக்கள் சபைகளான '**வார்டு குழு**' மற்றும் '**பகுதி சபை**'களும் அமைக்கப்படாத சூழலே பல ஆண்டுகள் நீடித்தது.

தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் திருத்தச் சட்டம் 2010 அதாவது சட்ட எண் 35 **(Tamil Nadu Municipal Laws (Amendment) Act, 2010 i.e Act No. 35)** மூலம் தமிழ்நாட்டில் வார்டு குழு மற்றும் பகுதிசபைகள் அறிவிக்கப்பட்டன. ஆனால், சட்டம் நடைமுறைக்கு வர வேண்டும் என்றால் அதற்கான விதிமுறைகள் உருவாக்கப்பட வேண்டுமல்லவா? உரிய விதிகள் உருவாக்கப்படாததால் வார்டு குழுக்களும், பகுதி சபைகளும் காகிதத்தில்தான் இருந்து வந்தனவே தவிர நடைமுறைக்கு வரவில்லை. இவற்றிற்கான விதிமுறைகள் கடந்த ஜூன் 24, 2022 அன்றுதான் தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்டது. **THE TAMIL NADU URBAN LOCAL BODIES (WARD COMMITTEE AND AREA SABHA) RULES, 2022. [G.O. Ms. No. 92, Municipal Administration and Water Supply (Election), 24th June 2022.]**

சுமார் 29 ஆண்டுகள் காத்திருப்பிற்குப் பின் வந்திருக்கும் இந்த விதிகள் சொல்வது என்ன? பகுதி சபை என்றால் என்ன? வார்டு குழு என்றால் என்ன? இதில் மக்கள் எவ்வாறு பங்கேற்க முடியும்? இவ்வமைப்புகளின் வேலைதான் என்ன? இப்படி மக்களுக்கு எழும் கேள்விகளுக்கு எளிமையான முறையில் பதில் அளிக்க முயல்வதே இச்சிறு நூலின் நோக்கம். இதில் உள்ள பகுதி சபை மற்றும் வார்டு குழு குறித்த விவரங்கள் அனைத்தும் அரசு, 'நகர நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை' சார்பில் வெளியிடப்பட்ட அரசாணை **(THE TAMIL NADU URBAN LOCAL BODIES (WARD COMMITTEE AND AREA SABHA) RULES, 2022 [G.O. Ms. No. 92, Municipal Administration and Water Supply (Election), 24th June 2022]** மற்றும் தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் திருத்தச் சட்டம் **2010 (Act.No 35 of 2010 - Tamil Nadu Municipal Laws (Amendment) Act, 2010)** ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவையே. புதிய விதிகள் கொண்டுவரப்பட்டாலும் அவை பலவீனமான விதிகளாகவே உள்ளன. வெளிப்படையாக சொல்வ-தென்றால், இவ்விதிகள், பெயரளவிற்கு பகுதி சபை மற்றும் வார்டு குழுக்களை அமைக்குமே தவிர வலுவான சபைகளை அல்ல. ஆனால் தற்போது உள்ள விதிகளை அறிந்து கொண்டு, அவற்றை மாற்றி வலுப்படுத்த வேண்டிய பொறுப்பு நமக்குள்ளது.

1996லிருந்து தமிழ்நாட்டில் நடைமுறையில் இருக்கும் கிராமசபை தற்போது மக்களின் கவனத்தைப் பெறக் காரணம் பல சமூக இயக்கங்களின் தொடர் பிரச்சாரமே! கிராமப்புற மக்களிடம்

விழிப்புணர்வு ஏற்படுத்தியது போன்று நகர்ப்புற மக்களிடமும் விழிப்புணர்வு ஏற்படுத்தி மக்கள் அமைப்புகளான ‘பகுதி சபை’ மற்றும் ‘வார்டு குழு’க்களை திறம்பட செயல்பட வைப்பதே நமது நோக்கம். அதற்கான ஒரு எளிய முயற்சியே இக்கையேடு.

# பகுதி சபை

## 1.பகுதி சபை என்றால் என்ன?

நகர்ப்புற உள்ளாட்சிகளான, மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள ஒவ்வொரு வார்டும் பல பகுதிகளாக அதன் மக்கள் தொகையின் அடிப்படையில் பிரிக்கப்படும். அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதியிலும், வாக்காளர்கள் அனைவரும் அந்தப்பகுதி மற்றும் வார்டு தொடர்பான தேவைகள் மற்றும் பிரச்சனைகளையொட்டி அந்த வார்டின் கவுன்சிலர் மற்றும் பல்வேறு அரசுத்துறை அலுவலர்களுடன் கலந்து, விவாதிப்பதற்கான ஒரு தளமே பகுதி சபை ஆகும்.

## 2.நகர உள்ளாட்சிகளில் எத்தனை பகுதி சபைகள் உருவாக்கப்படும்?

நகர்ப்புற உள்ளாட்சிகளில், அங்குள்ள மக்கள் தொகைக்கேற்ப அவற்றின் வார்டுகள் கீழ்காணும் அட்டவணையின் படி பல பகுதிகளாகப் பிரிக்கப்படும்.

இந்த ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு சபை வீதம் பகுதி சபை உருவாக்கப்படும்.

<table>
<tr><th>வ. எண்</th><th>நகர்ப்புற உள்ளாட்சி</th><th colspan="2">பகுதிகளின் எண்ணிக்கை (ஒரு வார்டிற்கு)</th></tr>
<tr><td>1</td><td>பேரூராட்சி</td><td colspan="2">3</td></tr>
<tr><td>2</td><td>நகராட்சி</td><td colspan="2">4</td></tr>
<tr><td rowspan="4">3</td><td rowspan="4">மாநகராட்சி</td><td>மக்கள் தொகை</td><td>பகுதிகளின் எண்ணிக்கை</td></tr>
<tr><td>5 லட்சம் வரை</td><td>4 முதல் 5</td></tr>
<tr><td>5 முதல் 10 லட்சத்திற்குள்</td><td>6 முதல் 9</td></tr>
<tr><td>10 லட்சத்திற்கு அதிகமாக</td><td>10</td></tr>
</table>

## 3.பகுதி சபையில் யாரெல்லாம் கலந்து கொள்ளலாம்?

நகர்ப்புற உள்ளாட்சிகளில் உருவாக்கப்படும் பகுதி சபையில் அந்தப் பகுதியில் வாக்காளர்களாக உள்ள அனைத்து மக்களும் கலந்து கொள்ளலாம்.

## 4. பகுதி சபையின் எல்லை என்ன?

பகுதி சபைகளுக்கான எல்லையை, மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் மாவட்ட ஆட்சியர் அந்தந்த நகர்ப்புற உள்ளாட்சியின் செயல் அலுவலருடன் (Executive Authority) சேர்ந்து (சென்னை மாநகராட்சியில் மட்டும் மாநகர ஆணையர் சென்னை மாவட்ட ஆட்சியருடன் சேர்ந்து) வரையறை செய்வார்கள். அப்படி வரையறை செய்யப்பட்ட பகுதிகளுக்கு வரிசை எண் அளிக்கப்பட்டு, அந்த எண் அடிப்படையில் பெயர் வைக்கப்பட்டு அழைக்கப்படும்.

## 5. பகுதி சபையின் தலைவர் யார்?

பகுதி சபையின் தலைவர் அந்த பகுதி இருக்கும் வார்டின் கவுன்சிலரே. அந்த வார்டில் உள்ள அனைத்து பகுதி சபைகளுக்கும் அவரே தலைவர் ஆவார்.

## 6. வருடத்திற்கு எத்தனை முறை பகுதி சபை கூட்டப்பட வேண்டும்?

மூன்று மாதங்களுக்கு ஒருமுறை என வருடத்திற்கு 4 முறை பகுதி சபை அதன் தலைவரால் கூட்டப்பட வேண்டும்.

## 7. பகுதி சபையின் குறைவெண் வரம்பு என்ன?

| வரிசை எண் | பகுதியின் மக்கள் தொகை | குறைவெண் வரம்பு |
|---|---|---|
| 1 | 500 வரை | 50 பேர் |
| 2 | 501 முதல் 3000 வரை | 100 பேர் |
| 3 | 3001 முதல் 10000 வரை | 200 பேர் |
| 4 | 10000க்கும் அதிகமாக | 300 பேர் |

## 8. பகுதி சபையின் பணிகள் என்னென்ன?

●பகுதி சபை தங்கள் பகுதிக்குக்கானத் திட்டங்களுக்கான பரிந்துரைகள், பணிகள் போன்றவற்றை நகர மன்றத்திற்கு சமர்ப்பிக்க முடியும்.

●பகுதி சபை தங்கள் பகுதியின் குறைகளை அறிக்கைகளாகவும், குடியிருப்பு வசதிக்கான பரிந்துரைகளாகவும் நகர மன்றத்திற்கு அளிக்க முடியும்.

●மேலும் பகுதி சபை அந்தந்த நகர்ப்புற உள்ளாட்சியின் செயல் அலுவலரால் (Executive Authority) ஒதுக்கப்படும் பிற பணிகளையும் செய்யும்.

இங்கு நகர மன்றம் என்பது பேரூராட்சி எனில் பேரூராட்சி மன்றத்தையும், நகராட்சி எனில் நகராட்சி மன்றத்தையும், மாநகராட்சி எனில் மாநகராட்சி மன்றத்தையும் குறிக்கும்.

# வார்டு குழு

### 9.வார்டு குழு என்றால் என்ன?

வார்டு குழு என்பது ஒரு வார்டிலிருந்து அந்த நகர மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் கொண்ட குழுவாகும். அதாவது ஒரு வார்டில் 4 பகுதி சபைகள் உள்ளன எனில் ஒரு பகுதிக்கு ஒரு நபர் வீதம் நான்கு பேர் கொண்ட குழு உருவாக்கப்படும். அந்தக் குழுதான் அந்த வார்டின் ‘வார்டு குழு’ ஆகும்.

### 10.வார்டு குழுவில் யாரெல்லாம் கலந்து கொள்ளலாம் ?

வார்டு குழுக் கூட்டங்களில் அந்தக் குழு உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொள்ள முடியும்.

### 11.வார்டு குழுவின் உறுப்பினர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள் ?

வார்டு குழுவின் உறுப்பினர்கள் அந்த வார்டு அடங்கியுள்ள நகர மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அதாவது ஒரு வார்டில் உள்ள பகுதி சபைகளுக்கு ஒருவர் வீதம் நகர மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு வார்டு குழு உறுப்பினர்களாக நியமிக்கப் படுவார்கள்.

இங்கு நகர மன்றம் என்பது பேரூராட்சி எனில் பேரூராட்சி மன்றத்தையும், நகராட்சி எனில் நகராட்சி மன்றத்தையும், மாநகராட்சி எனில் மாநகராட்சி மன்றத்தையும் குறிக்கும்.

**12.வார்டு குழு உறுப்பினர்கள் நியமனத்திற்கான வழிமுறைகள் என்னென்ன?**

- வார்டின் ஒவ்வொரு பகுதிக்கும் உரிய வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்பட்ட நபர்களிலிருந்து தகுதியான ஒருவரை வார்டு குழுவின் உறுப்பினராக நகர மன்றம் பரிந்துரைக்கிறது.

(குறிப்பு: வார்டு குழு உறுப்பினர் தேர்வில் அந்தந்த வார்டு கவுன்சிலர்களுடன் நகர மன்றம் இணைந்து செயல்படலாம். மேலும் வார்டு குழு உறுப்பினராக விரும்பும் மக்களும் தங்கள் வார்டு கவுன்சிலரை அணுகித் தங்கள் பெயரைப் பரிந்துரை செய்ய முயலலாம். ஆனால் இவை தற்போது அறிவிக்கப்பட்டுள்ள விதிகளில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை)

- சம்பந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி நிர்வாகத்தின் செயல் அலுவலர் வார்டு குழுவிற்காகப் பரிந்துரைக்கப்பட்ட உறுப்பினர்களின் விருப்பத்தைப் பெற்று, அவர்களால் வழங்கப்பட்ட விவரங்களை சரி பார்ப்பதுடன் பரிந்துரைக்கப்பட்டவர்களின் பட்டியலை நகர மன்றத்தின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிப்பார்.
- நகர மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பெயர்கள் ஒப்புதல் வழங்கப்பட்டவுடன் அந்நபர்கள் அந்தக் குறிப்பிட்ட வார்டுக்கான வார்டு குழு உறுப்பினர்களாகப் பொறுப்பேற்பார்கள்.

இங்கு நகர மன்றம் என்பது பேரூராட்சி எனில் பேரூராட்சி மன்றத்தையும், நகராட்சி எனில் நகராட்சி மன்றத்தையும், மாநகராட்சி எனில் மாநகராட்சி மன்றத்தையும் குறிக்கும்.

**13.வார்டு குழுவின் தலைவர் யார் ?**

சம்மந்தப்பட்ட வார்டின் கவுன்சிலரே அந்த வார்டு குழுவின் தலைவர் ஆவார்.

**14. வார்டு குழுவின் எல்லை என்ன?**

சம்பந்தப்பட்ட வார்டு எல்லையே அந்த வார்டு குழுவின் எல்லை ஆகும்.

**15.வருடத்திற்கு எத்தனை முறை வார்டு குழு கூட்டப்பட வேண்டும்?**

மூன்று மாதங்களுக்கு ஒருமுறை என வருடத்திற்கு 4 முறை வார்டு குழு அதன் தலைவரால் கூட்டப்பட வேண்டும். அவ்வாறு அவர் கூட்டத் தவறும் பட்சத்தில் நகர மன்றத்தின் செயல் அலுவலரால் குழுக் கூட்டம் கூட்டப்படும்.

**16. வார்டு குழுவின் குறைவெண் வரம்பு என்ன?**

| வ.எண் | நகர்ப்புற உள்ளாட்சி வகை | குறைவெண் வரம்பு |
|---|---|---|
| 1 | மாநகராட்சி மற்றும் நகராட்சி | தலைவர் + 2 உறுப்பினர்கள் |
| 2 | பேரூராட்சி | தலைவர் + 1 உறுப்பினர்கள் |

**17.வார்டு குழுவின் பணிகள் என்ன?**

- வார்டு குழு தங்கள் வார்டுக்குட்பட்ட பகுதிகளின் திட்டங்களுக்கான பரிந்துரைகள், பணிகள் போன்றவற்றை நகர மன்றத்திற்குச் சமர்ப்பிக்க முடியும்.

- வார்டு குழு தங்கள் வார்டுக்குட்பட்ட பகுதிகளின் குறைகளை அறிக்கைகளாகவும், குடியிருப்பு வசதிக்கான பரிந்துரைகளாகவும் நகர மன்றத்திற்கு அளிக்க முடியும்.

மேலும் வார்டு குழு அந்த நகர்ப்புற உள்ளாட்சியின் செயல் அலுவலரால் (Executive Authority) ஒதுக்கப்படும் பிற பணிகளையும் செய்யும்.

இங்கு நகர மன்றம் என்பது பேரூராட்சி எனில் பேரூராட்சி மன்றத்தையும், நகராட்சி எனில் நகராட்சி மன்றத்தையும், மாநகராட்சி எனில் மாநகராட்சி மன்றத்தையும் குறிக்கும்.

# பகுதி சபை மற்றும் வார்டு குழு விதி முறைகளில் உள்ள குறைபாடுகள்

**1.இடஒதுக்கீடு எங்கே?**

**வார்டு குழு உறுப்பினர் நியமனத்தில் இடஒதுக்கீடு இல்லாமை:** இந்தியாவில் இதுவரை வார்டு குழு கமிட்டி நடைமுறையில் உள்ள எல்லா மாநிலங்களிலும் வார்டு குழு உறுப்பினர்களின் நியமனத்தில் இடஒதுக்கீடு அமலில் இருக்கிறது. பெண்கள், பட்டியல் பிரிவினர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவடைந்தோர் என்று எல்லா தரப்பு மக்களையும் உள்ளடக்கி உறுப்பினராக்க ஏதுவாக இடஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழ்நாடு அரசின் விதிகளில் வார்டு குழு உறுப்பினர் நியமனத்தில் இடஒதுக்கீடு பற்றி எந்தக் குறிப்பும் இல்லை.

**2.வெளிப்படைத்தன்மை?**

**வார்டு குழு உறுப்பினர்கள் நியமனத்தில் வெளிப்படைத்தன்மை இல்லாமை :**
வார்டு குழு உறுப்பினர்களை ஒவ்வொரு பகுதியிலிருந்தும் எந்த அடிப்படையில் நகர்ப்புற மன்றம் ( பேரூராட்சி/ நகராட்சி / மாநகராட்சி) தேர்வு செய்யும் என்பது பற்றி விதிகள் எதுவும் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. உதாரணத்திற்கு 10 பகுதி சபைகள் கொண்ட ஒரு வார்டில் ஒவ்வொரு பகுதியிலும் ஒன்றுக்கு மேற்பட்டவாக்காளர்கள் வார்டு குழு உறுப்பினர்களாக விருப்பம் தெரிவித்தால் அவர்களில் ஒருவரை எதன் அடிப்படையில் மன்றம் தேர்ந்தெடுக்கும்? தமக்கு வேண்டியவர்களையோ அல்லது தங்கள் கட்சிக்காரர்களையோ பெரும்பான்மையாக ஆளுங்கட்சியினர் உள்ள மன்றம் நியமனம் செய்து விட வாய்ப்பு இருக்கிறது.ஆக இந்த நியமன விவகாரத்தில் வெளிப்படைத்தன்மை கேள்விக்குள்ளாக்கப்பட்டிருக்கிறது.

**3. மூவாயிரத்துக்கு ஒருவர் !**

**வார்டு குழு உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கான விகிதம்:** ஒவ்வொரு பகுதி சபையில் இருந்தும் ஒருவர்தான் வார்டு குழு உறுப்பினராக முடியும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இது

பன்முகத்தன்மை கொண்ட சமூகத்திலிருந்து பலதரப்பட்ட மக்கள் அவரவர் வார்டுகளில் நேரடியாகப் பங்கேற்பதற்கான வாய்ப்பை வெகுவாகச் சுருக்குகிறது. உதாரணமாகக் கிட்டத்தட்ட ஒரு கோடி பேர்வசிக்கும் சென்னை மாநகராட்சியில் ஒவ்வொரு வார்டுக்கும் குறைந்தது 30,000 மக்கள் தொகை இருக்கும். ஆனால் அதிகபட்சம் 10 வார்டு குழு உறுப்பினர்களே இருக்க முடியும் என்று சொல்லப்–பட்டிருக்கிறது. வெறும் 10 பேர்தான் உறுப்பினராக முடியும் என்பது 3000 நபர்களுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் இருக்கிறது. இதில் பன்முகத்தன்மை கொண்ட மக்கள் பிரதிநிதித்துவத்தை அங்கே எப்படி கொண்டு வர முடியும்? கேரளா, மேற்குவங்கம் போன்ற மாநிலங்களில் வார்டு குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை அந்தந்த வார்டின் மக்கள் தொகையைப் பொருத்து நிர்ணயிக்கப்படுகிறதே தவிர இப்படி பொத்தாம் பொதுவாக மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளுக்கு முறையே 10,4,3 எனச் சுருக்கப்படவில்லை.

### 4.குறையும் மக்கள் குரல்

**வார்டு குழுக் கூட்டம் நடத்துவதற்கான குறைந்தபட்ச உறுப்பினர் எண்ணிக்கை :** வார்டு குழு உறுப்பினர்கள் எண்ணிக்கையானது மிகக் குறைவாகத்தான் வரையறுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கூட்டத்தில் பங்கேற்கக் கூடிய உறுப்பினர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கையை மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு இரண்டு உறுப்பினர்கள், பேரூராட்சிக்கு ஒரு உறுப்பினர் என்று அறிவித்திருப்பது எவ்வளவு பெரிய அபத்தம். இவ்வளவு குறைவான உறுப்பினர்களுடன் நடத்தப்படும் கூட்டம் அந்தந்த வார்டு மக்களின் குரலாக எப்படி இருக்க முடியும்?

### 5. மூன்று மாதத்திற்கு ஒரு கூட்டம் !

**வார்டு குழு கூட்டுவதற்கான கால அவகாசம்:** ஒவ்வொரு வார்டு குழுவும், 3 மாதங்களுக்கு ஒருமுறை கூட்டப்படும் என்று குறிப்பிட்டிருப்பது மக்கள் பிரச்சனைகளுக்கு உரிய காலத்தில் தீர்வு காணப் போதுமானதாக இருக்காது. கர்நாடகா, மேற்குவங்கம் போன்ற மாநிலங்களில் இருப்பது போல வார்டு குழு மாதம் ஒரு முறை கூடி பகுதி சபையிலிருந்து பெறப்பட்டக் கோரிக்கைகளைத் தொடர்ந்து கண்காணித்துச் செயல்பட வேண்டும்.

**6.பெயரளவுக்கு ஒரு கூட்டம் !**

**பகுதி சபை மற்றும் வார்டு குழுக் கூட்டங்கள் நடத்தத் தேவையான விதிமுறைகள் இல்லாமை :** இக்கூட்டங்கள் பற்றி மக்களுக்கு அறிவிக்கும் முறை, கூட்டத்தின் விவாதப் பொருட்கள், கூட்டத்துக்குக் குறைந்தபட்சம் எத்தனை நாட்களுக்கு முன்பாக அறிவிப்பு வெளியிட வேண்டும் போன்ற எந்தத் தகவலுமே, விதிகளில் குறிப்பிடப்படவில்லை. இப்படி விதிகளில் தெளிவில்லையெனில் போதியத் தகவலின்றி கூட்டம் அறிவிக்கப்பட்டு பெயரளவுக்கு நடத்தப்படும் அபாயம் உள்ளது. அவ்வாறு நடத்தப்பட்டால், அது பகுதி மக்களுக்கான தளமாக எப்படி இருக்கும்? மக்கள் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் கூட்டமாக அது எப்படி அமையும்?

**7.உரிமைகள், பணிகள் மற்றும் அதிகாரங்களின் நீர்ப்புத்தன்மை:**

எல்லாவற்றையும்விட முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால் மக்கள் பங்கேற்கும் தளங்களாகிய, பகுதி சபை மற்றும் வார்டு குழுவிற்கான உரிமைகள், பணிகள் மற்றும் அதிகாரங்கள் என்ற பட்டியலில், இந்த மக்கள் சபைகளை வெறும் ஆலோசனை வழங்கும் தளங்களாகவும் திட்டங்கள் தயாரித்து சமர்ப்பிக்கும் தளங்களாகவும்தான் அரசு வரையறுத்திருக்கிறது. மக்கள், தங்கள் பகுதி மற்றும் வார்டுக்குத் தேவையான எந்த ஒரு முடிவையும் கிராமசபையைப்போல குழுவாகச் சேர்ந்து எடுக்கவோ, பயனாளிகள் பட்டியலை இறுதி செய்யவோ, திட்டங்களைக் கண்காணிக்கவோ அதிகாரம் அளிக்கப்படவில்லை.

**களம் காண்போம்!**

மேற்கண்ட விமர்சனங்களை வாசிக்கும் எவரும், பல பத்தாண்டுகளுக்குப் பிறகு விதிகள் வந்தும் பயனில்லையே என்று எண்ணுவது இயல்பே! என்ன செய்வது, ஜனநாயகம் அப்படித்தான் இயங்குகிறது. மக்கள் போராட்டங்கள் இல்லாமல் உரிமைகளை வென்றெடுக்க முடியாது என்பதே வரலாறு சொல்லும் செய்தி. தமிழ்நாடு அரசு கொண்டு வந்திருக்கும் பகுதி சபை மற்றும் வார்டு குழு விதிகளை, நகர்ப்புற உள்ளாட்சிகள், தன்னாட்சி அதிகாரம் பெறுவதற்கான ஒரு தொடக்கப் புள்ளி என்றே கருதுவோம். பகுதி சபை மற்றும் வார்டு குழுக்களை வலுப்படுத்த இவ்விதிகளில் தேவையான திருத்தங்களைக் கொண்டு வரவும், குறிப்பாக நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கெனப் பொதுச் சட்டம் கொண்டு வரவும் தமிழ்நாடு அரசிற்குத் தொடர்ந்து அழுத்தம் கொடுப்போம். கைகோர்த்து களம் காண்போம், வாருங்கள் !


வரைபட விளக்கம்
பேரூராட்சி/ நகராட்சி / மாநகராட்சி மன்றம்
மன்ற தலைவர் / மேயர்
மற்றும் கவுன்சிலர்கள்
வார்டு 1
வார்டு 2
வார்டு 3,4...
வார்டு குழு
வார்டு கவுன்சிலர்
வார்டு குழு உறுப்பினர்கள்
வார்டு குழு
வார்டு கவுன்சிலர்
வார்டு குழு உறுப்பினர்கள்
பகுதி 1
பகுதி 2
பகுதி 3,4...
பகுதி சபை
வார்டு கவுன்சிலர்
பகுதி மக்கள்
பகுதி சபை
வார்டு கவுன்சிலர்
பகுதி மக்கள்
பகுதி 1
பகுதி 2
பகுதி 3,4...
பகுதி சபை
வார்டு கவுன்சிலர்
பகுதி மக்கள்
பகுதி சபை
வார்டு கவுன்சிலர்
பகுதி மக்கள்

உள்ளாட்சிகள் தொடர்பான உங்கள் சந்தேகங்களுக்கு பதில் அளிக்கிறது.

**உள்ளாட்சிகளுக்கான**

**மக்கள் தகவல் மையம்**

**9443662058**

அழைப்பு நேரம் : **9 AM – 1 PM**

# People Participatory Platforms in TN Urban Local Governments

*Area Sabha & Ward Committee*

An Introduction

**People Participatory Platforms in**
**TN Urban Local Governments**
*Area Sabha & Ward Committee*
An Introduction

**First Edition : November 2022**

Pages: **16**

Published by: **Thannatchi & Voice of People**

Address: **Thannatchi**
**69, Angappa Naicken Street,**
**Chennai 600 001.**

Contact: **94457 00758 / 94448 26655**
Email: **thannatchi@gmail.com / concernedcitizenscall@gmail.com**
Website: **thannatchi.in**
Facebook: **fb.com/thannatchi & fb.com/ConcernedCitizensCall**
Twitter: **@thannatchi & @vopTamilNadu**
YouTube : **Thannatchi Ulaatchi Ungalaatchi**

English Translation : **Caxton & Charu**
Book design : Mr.**G.Devanaathan**
Cover page design: Mr.**V.M.Tamilvannan**
Printers: **Jothy Enterprises, Chennai - 600005**

Donation : ₹ **30/-**

Special thanks: **Tambaram Makkal Kuzhu, 9940220091**

¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬¬

**Other publications by Thannatchi**

**Gramasabai** adippadai kelvigalum pathilgalum (Tamil)

**Ooratchi Nirvagam** adippadai kelvigalum pathilgalum (Tamil)

**MGNREGA** adippadai kelvigalum pathilgalum (Tamil)

## Contents


| S.No | Title | Page |
|---|---|---|
| 1. | Introduction | 5 |
| 2. | Area Sabha | 7 |
| 3. | Ward Committee | 10 |
| 4. | Ineffective Rules of Area Sabha & Ward Committee | 12 |
| 5. | Block Diagram | 15 |



Referneces:

• THE TAMIL NADU URBAN LOCAL BODIES (WARD COMMITTEE AND AREA SABHA) RULES, 2022

[G.O. Ms. No. 92, Municipal Administration and Water Supply (Election), 24th June 2022]

• Act. No 35 of 2010 - Tamil Nadu Municipal Laws (Amendment) Act, 201

## *Thannatchi*

With 'Good Governance in Local Government, Sustainable Development in Local area' as the guiding slogan, Thannatchi, a people's movement seeks to transform local governments, especially the village panchayat, into a 'government for the common people to govern themselves'.

Thannatchi is a movement that has been registered as a society under the Tamil Nadu Societies Registration Act-1975 in the year 2018, by social activists who have been continuously working for rural local governments, grama sabhas and village autonomy since 2017 under the name 'Ullatchi Ungalatchi'.

And Thannatchi continues to be the voice of the voiceless with the principle of decentralisation to reach power and information to the marginalised citizens to participate in local governance.

**"Federalism at the Union!**
**Autonomy at the State!**
**Self-governance at the Local area!"**

Is not an empty slogan...
But our ultimate goal to conquer!

## *Voice Of People*

Voice of People is a non-partisan, voluntary organisation of concerned citizens launched in Chennai in early 2017 by a group of socially conscious women.

Area Sabhas and Ward Committees are people participatory platforms to ensure **direct participation of people, transparency and accountability** in Urban Local Governments. Voice of People has been working since 2018 to implement these participatory platforms without diluting their true objectives in Tamil Nadu.

Also Voice of People has formed a coalition with a few similar people movements to strengthen participatory democracy widely in Tamil Nadu, by taking forward the campaign to political parties, people representatives and the general public.

**Introduction:**
Warm Greetings to all those who live in Town Panchayats, Municipalities or Corporations and those who have absolute faith in grassroots democracy!

Most of us would've heard about Gram Sabhas. Gram Sabha provides every single elector in a Village Panchayat with the platform to participate in the local governance including planning and development of their village. During the last assembly elections, it was one of the biggest talking points for all the political parties including the present ruling party. Following the Gram Sabha model our current Chief Minister, who was then the leader of the opposition, used it as a campaign strategy to meet the people by personally conducting what he called 'People's Grama Sabhas' in various villages. Needless to say, the significance of Gram Sabha has captivated the attention of everyone. Looking at all of these, one may wonder if such democratic institutions are available for people living in Town Panchayats, Municipalities or Corporations. Do we have an equivalent of Gram Sabha in cities and towns? The answer is YES. They are called Area Sabha and Ward Committee. They are the lifeline of participatory democracy in the urban sector.

Let us rewind a few decades and go back to 1993, when the Constitution (73rd Amendment) Act, 1992, came into force with effect from the 24th April, 1993 and inserted Part IX in the Constitution of India and accorded Panchayats a Constitutional status as institutions of local self-governance for rural India. Following this, the TamilNadu Panchayat Act 1994 was passed in the Tamil Nadu Assembly. This paved the way for a people’s sabha called Grama Sabha where common citizens could participate in the local

governance and decision-making process in their village. In the same year, the Constitution (74th Amendment) Act, 1992, inserted Part IXA in the Constitution, through which the system of Municipalities or Urban Local Governments was constitutionalised. However, following this a Common Act for Urban Local Governments weren't enacted in Tamil Nadu. And somehow a participatory democratic setup like the Gram Sabha never came into existence at the urban level.

In 2010, the Tamil Nadu Government passed the law called Tamil Nadu Municipal Laws (Amendments) Act, 2010, also referred to as ACT NO. 35 of 2010 which mandates the constitution of Ward Committee and Area Sabha in its Corporations and Municipalities. However, for any law to come into practice, relevant rules must be framed. Since the rules for this Act were not framed and published by the State Government for a long time, these institutions of Ward Committees and Area Sabhas have so far existed only on paper in Tamil Nadu. Only recently, on June 24, 2022, Tamil Nadu Government released the rules for Ward Committee and Area Sabha, through THE TAMIL NADU URBAN LOCAL BODIES (WARD COMMITTEE AND AREA SABHA) RULES, 2022. [G.O. Ms. No. 92, Municipal Administration and Water Supply (Election), 24th June 2022.]

After almost 29 years of wait, finally we have the rules in our hands! However, it is disheartening to notice that the rules framed by the Government are not comprehensive and strong enough. They lack in depth and foresight that one cannot help but wonder how these wafer-thin rules can form the basis to build a strong Area Sabha and Ward Committee! But despite these apprehensions, we have the responsibility of understanding the current rules to ensure these rules are amended to be strong and effective.

So, what do these rules say? What is an Area Sabha? What is a Ward Committee? What are their powers and limitations? How can a common citizen participate in it? These are some basic questions that may arise in your mind. This booklet attempts to answer these questions in a simple and easy-to-understand language. The answers to the questions you'll find here are derived based on the following, THE TAMIL NADU URBAN LOCAL BODIES (WARD COMMITTEE AND AREA SABHA) RULES, 2022. [G.O. Ms. No. 92, Municipal Administration and Water Supply (Election), 24th June 2022, and Act. No 35 of 2010 - Tamil Nadu Municipal Laws (Amendment) Act, 2010.

We have to bear in mind that reformation does not happen overnight. Gram Sabha which has been in effect since 1996 took 20 years to gain momentum in Tamil Nadu and started getting the attention of the people mainly because of the consistent and continuous campaign undertaken by many organizations. So just as Gram Sabha brought about an awareness among the rural people, this booklet is a humble effort in the process of bringing about an awareness among the urban population about Area Sabha and Ward Committee and effective functioning of them.

## Area Sabha

### 1.What is an Area Sabha?

Each ward in a Town Panchayat, Municipality or Corporation is split into multiple Areas, based on its population. Area Sabha provides the platform where any voter of that area along with their councillor and various Government department officials can participate to discuss, plan and prioritize the needs and issues related to their respective area and ward.

**2. In each Urban Local Government how many Areas Sabhas will be created?**

In a Town Panchayat, Municipality or Corporation, the number of Area Sabhas may vary depending upon the number of areas in a ward which in turn depends on the population in a ward. The guidelines to form an Area are as follows:

<table>
<tr><th>S.No</th><th>Catogory of Urban Local Government</th><th colspan="2">Number of Areas in a Ward</th></tr>
<tr><td>1</td><td>Town Panchayat</td><td colspan="2">3</td></tr>
<tr><td>2</td><td>Municipality</td><td colspan="2">4</td></tr>
<tr><td rowspan="4">3</td><td rowspan="4">Corporations</td><td>Population</td><td>Number of Areas in a Ward</td></tr>
<tr><td>Upto 5 lakhs</td><td>4 to 5</td></tr>
<tr><td>Above 5 lakhs and below 10 lakhs</td><td>6 to 9</td></tr>
<tr><td>Above 10 lakhs</td><td>10</td></tr>
</table>

**3.Who are eligible to participate in the Area Sabha?**

Any voter whose name is on the particular area's voter list can participate in their area's Area Sabha.

**4.How is the delimitation of the area determined?**

In respect of Chennai Corporation, the Commissioner, Chennai Corporation shall delimit each ward into areas and notify the boundaries of the areas in each ward in the District Gazette of Chennai, through the District Collector. In respect of other Municipal Corporations, Municipalities and Town Panchayats, respective District Collectors in consultation with the Executive Authority of the Respective

Municipal Corporations, Municipalities and Town Panchayats shall delimit each ward into areas and notify the boundaries of the areas in each ward, in the District Gazette of the District concerned. The area so delimited shall be numbered, suitably.

**5.Who is the Chairperson of an Area Sabha?**

The ward Councillor will be the Chairperson of all the Area Sabhas under the ward.

**6.What is the minimum number of times the Area Sabha should be convened in a year?**

It should be convened a minimum of four times a year that is once in 3 months.

**7.What is the Quorum for an Area Sabha meeting?**

| S.No | Population of an Area | Quorum for the meeting |
|---|---|---|
| 1 | Upto 500 | 50 |
| 2 | 501 to 3000 | 100 |
| 3 | 3001 to 10000 | 200 |
| 4 | Above 10000 | 300 |

**8.What are the functions, duties and powers of Area Sabha?**

- The Area Sabha shall make suggestions and submit projects for the area or part thereof, to the council.
- The Area Sabha can make representation about grievances and suggestions on civic amenities, to the council.
- The Area Sabha shall perform such other functions as may be assigned to it by the Executive Authority of the Corporation or Municipal Council, concerned.

# Ward Committee

**9.What is a Ward Committee?**

Ward Committee is a body formed one per each ward by the council. A ward committee consists of as many members as the number of areas in the respective ward. For example, if a ward has 4 areas, then there'll be 4 Ward Committee members for that ward. These members are nominated by the council.

**10.Who can participate in the Ward Committee meetings?**

Only members of the particular Ward Committee can participate in the meetings.

**11.How are the Ward Committee members nominated / selected?**

The council nominates one eligible person from among the persons registered in the electoral rolls pertaining to each area of the ward as a member of the Ward Committee that is, the council nominates to the Ward Committee one member from each area.

**12.What is the procedure to become a Ward Committee member?**

- The council nominates one eligible person from among the persons registered in the electoral rolls pertaining to each area of the ward as a member of the ward committee. (Note: Maybe the council would work with the respective ward councillors in the selection process. Also people who want to become a ward committee member can try and approach their ward councillor to nominate their name. But these are not clearly mentioned in the Rules notified as of now.)

- The Executive Authority of that urban local Government will obtain the willingness of the nominated members of Ward Committee and verify the details provided by them and present the nominees list to the council for further confirmation.

- Once the names are confirmed by the council, those individuals will become the Ward Committee members for that specific ward.

**13.Who is the chairperson of the Ward Committee?**
The Councillor representing the ward will be the chairperson of the Ward Committee.

**14.How are the geographical boundaries of a Ward Committee defined?**
The area allotted as a specific ward as per local Government guidelines will be the boundaries for the Ward Committee as well.

**15.How many times in a year should a Ward Committee meeting convene?**
The Chairperson of Ward Committee, that is the ward councillor will have to convene the meeting at least four times a year, that is once in 3 months. If for whatsoever reason they fail to do so, then the Executive Authority of that ward should convene the meeting.

**16.What is the quorum for a Ward Committee meeting?**

| S. No | Category of Municipal area | Quorum for the meeting |
|---|---|---|
| 1 | Corporations and Municipalities | Chairperson + 2 members |
| 2 | Town Panchayats | Chairperson + 1 member |

**17. What are the rights and duties of the Ward Committee?**

- The Ward Committee shall make suggestions and submit projects for the ward or part thereof, to the council.
- The Ward Committee can make representation about grievances and make suggestions on civic amenities, to the council.
- The Ward Committee shall perform such other functions as may be assigned to it by the Executive Authority of the Corporation or Municipal Council concerned.

# Ineffective Rules of Area Sabha and Ward Committee

**1.Where is Reservation?**

There is no mention of reservation at all in the current rules in the selection of Ward Committee members. In other states where Ward Committees have been functioning fully, there are specific guidelines stated pertaining to reservation which includes representation of women, SC/ST, differently abled, marginalised sections from the constituent areas. But this is clearly missing in the rules framed by the Tamil Nadu government.

**2.Lack of Transparency:**

There is no transparency in the Ward Committee member selection process. The rules merely state a general guideline that the council selects the Ward Committee member. But no details are provided as to the criteria for the selection. For example, in a ward consisting of 10 areas and in each area if more than one individual express interest to be a Ward Committee member, then on what basis, the council selects or rejects the members? Obviously, there is a possibility of the selection being influenced by favouritism that could be personal or politically-biased (particularly the ruling party). So where is the question of a just and fair selection process here? And with such a vague selection process where is the question of forming a truly representative and effective ward committee?

**3.Disproportionate Representation**

The ratio of representation of Ward Committee members recommended in the rules is highly disproportionate. The guidelines suggest that there can be only one Ward Committee member per area. This might work for areas with smaller population, but for an area with larger population density, this won't justify democratic representation. Take for example, Chennai. At least one crore people live here. And each ward may easily have about heterogeneous groups of people of

about 30,000 inhabitants belonging to diametrically opposite socio-economic categories. Now the guideline says, a ward can have a maximum of only 10 areas, that is 10 Ward Committee members. That brings the total representation to 1 member for every 3000 inhabitants. How can you expect diversity in such an unbalanced representation? In States like Kerala and West Bengal, the number of Ward Committee members are defined only based on the population density, without having any caps like 10 for Corporations, 4 for Municipalities and 3 for Town Panchayats as it is the case with the guidelines formed by the Tamil Nadu government.

**4.Diminishing voice of people**

The minimum number of members required to conduct a Ward Committee meeting as specified in the Rules is very less. Already, the representation in the Ward Committee is too little. On top of this, to conduct a meeting, the bar set for minimum number of members required to be present feels like a mockery. Because for Corporations and Municipalities it is just 2 members and for Town Panchayats, it's even worse, they just need one member to be present to conduct a Ward Committee meeting. How can a meeting with such minimum participation can truly reflect the voice of people from the ward?

**5.Frequency of Ward Committee meetings**

Gathering once in 3 months to discuss people's issues does not seem to be adequate enough to discuss or follow-up on previous actions and plan future actions. Similar to states like Karnataka and West Bengal, even in Tamil Nadu, Ward committee meetings should be conducted once a month in order to efficiently address people's demands received from Area Sabhas and monitor the progress to ensure they are resolved on time.

**6.Meetings - just a formality**

There is a complete lack of guidelines on how the Area Sabha and Ward Committee meetings should be conducted in the notified rules. For example, there's no clarity on various aspects like, what should be discussed in these meetings, how will the general public be intimated of the meetings, how many days prior to the meeting should the notification be given to the public and so on. Without clarity on any of these, how will the Area Sabha be an effective platform for concerned citizens to participate? Unless there are clear guidelines defined for these, the Area Sabha and its meetings would only be a farce.

**7.Degradation of Rights and Responsibilities:**

Unlike the Gram Sabha of a Village Panchayat, neither the Area Sabha nor the Ward Committee can question the authorities, be a part of the planning process or oversee execution of projects. Here their roles are reduced to merely giving suggestions and doing what the Executive Authority of that Urban Local Government approves of. It only indicates that the people cannot play an active role in their local governance. It reduces them to helpless spectators.

**Let's get started!**

After reading the above critique, it is natural for us to feel let down by the government because the rules were released after so many years and yet they prove to be empty and completely ineffective. But history has taught us that without protest and voicing our objections we cannot reclaim our rights and that's how democracy functions. So let us consider these rules as the starting point to establish a more effective and robust local self-governance. Let us come together to exert pressure on the TN Government to amend these rules to implement Ward Committee and Area Sabha as truly powerful, people participatory platforms.



Block Diagram
Town Panchayat/Municipality/Corporation
Chairperson/ Mayor
and Councillors
Ward 1
Ward Committe
Ward Councillor
Ward Committee Members
Area 1
Area Sabha
Ward Councillor
Area People
Area 2
Area Sabha
Ward Councillor
Area People
Area 3,4...
Ward 2
Ward Committe
Ward Councillor
Ward Committee Members
Area 1
Area Sabha
Ward Councillor
Area People
Area 2
Area Sabha
Ward Councillor
Area People
Area 3,4...
Ward 3,4...

We answer your queries related to
Local Self Governments

**People Information Center**

For Local Self Governments

# 9443662058

Contact Time : **9 AM – 1 PM**